1983 பிப்ரவரி 7]

மதுரை மாவட்டத்தின் புதிய நூற்பாலைகள் தொடங்க 1980-81-ல் வழங்கப்பட்டுள்ள அனுமதிகள்.

*வினா எண். 134—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் புதிதாக நூற்பாலை தொடங்க 1980-81-ல் யார், யாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, விவரங்கள் அடங்கிய அறிக்கை * ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

அதோடு, பருத்தி பயிரிடுவதற்காக 25 ஆயிரம் கதிர்கள் கொண்ட ஒரு கூட்டுறவு நூற்பாலை ஒன்றை தேனிப்பகுதியிலே ஏற்படுத்துவதற்கு பணி நடைபெற்று வருகின்றது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் 32 ஆலைகள் தொடங்குவதற்காக அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்கள் இருக்கின்றன. இந்த 32 ஆலைகளிலே ஏதாவது ஆலைகள் உற்பத்தியைத் தொடங்கி இருக்கின்றனவா? அப்படித் தொடங்கப்பட்டால் அவற்றிலிருந்து உற்பத்தியாகும் நூல் அளவைப் பற்றிய விவரம் ஏதாவது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு 1980—81 ஆண்டிலே உரிமங்கள் பெற்றிருக்கிறார்கள். இதிலே எந்த நூற்பாலையும் உற்பத்தியைத் தொடங்கியதாகத் தெரியவில்லை. ஏனென்றால் அந்த நேரத்திலே நூற்பாலைகளிலே அதிகமான லாபம் இருந்த போது பல பேர் மனுச் செய்து உரிமம் பெற்றார்கள். சில பேர்கள் இப்போதுதான் கட்டுமானப் பணிகளை ஆரம்பித்திருக்கிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அனுமதி பெற்ற 32 ஆலைகளில் ஏறத்தாழ முக்கால் பங்கு ஆலைகள் ஒரு குறிப்பிட்ட பகுதியிலே அதாவது திண்டுக்கல், வேடசந்தூர் பகுதியிலே துவங்கவிருக்கின்றன. அதைப் பற்றிக் கூட வருத்தமில்லை. ஆனால் அதிகமாக பருத்தி விளையக்கூடிய திருமங்கலம், உசிலை பகுதிகளிலே இப்படிப்பட்ட ஆலைகளைப் புதிதாகத் துவங்க அரசு முயற்சி எடுக்குமா ?

616—621ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, உரிமங்கள் வழங்குவது பம்பாயிலே உள்ள மைய அரசுக்குச் சொந்தமான நூல் ஆணையர், டெக்ஸ்டைல் கமிஷனர் ஆவார். போடப்படுகின்ற மனுக்கள் அனைத்தையும் அவர்கள் நேரடியாகப் பரிசீலித்து உரிமம் வழங்குகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பலரை அல்லது சிலரைப் பார்த்து புதிதாக மனுச் செய்து அந்தப் பகுதியிலே நூற்பாலையைத் துவங்க நடவடிக்கை எடுப்பார்களானால் அரசும் அதற்கு உதவி செய்யும்.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூற்பாலைகளுக்கு உரிமம் வழங்கி 2 ஆண்டுகளுக்கு மேலாகியும் இதில் நூற்றுக்கு 75 சதவீதம் ஆலைகளின் கட்டுமானப் பணிகள் இன்னும் துவங்கப்படவில்லை. இப்படி ஒரு உரிமம் வழங்குகிறபோது, இந்த நிபந்தனைக்கு உட்பட்டு, இந்த ஆண்டுக்குள், அல்லது இத்தனை மாதங்களுக்குள் வேலைகள் துவங்கப்படவேண்டுமென்ற நிபந்தனைக்கு உட்பட்டு அந்த உரிமங்கள் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல பல பேர்கள்—தனியார்கள்— மனு செய்து உரிமங்களைப் பெற்றுக் கொள்கிறார்கள். அதற்குப் பின்னர் வேலைகளைத் துவங்குவது இல்லை. 1981-ஆம் ஆண்டிலே நூற்பாலைகளில் மொத்தமாக லாபம் வருகிறது என்பதாலே பலர் இப்படி மனுச் செய்தார்கள். அதையெல்லாம் கருத்திலே கொண்டு நாம் இப்போது 1981 ஜனவரிக்குப் பின்னாலே நூற்பாலைகள் நிறுவ வேண்டுமென்றால், கூட்டுறவுச் சங்கங்கள், அதேபோல் கம்பெனிகள் மட்டுமே அவற்றுக்கான அனுமதி கொடுக்க வேண்டும் என்று அவர்களே ஒரு ரெஸ்ட்ரிக்ஷன் கொண்டு வந்திருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலே இப்போது உரிமங்கள் மிகக் குறைவாகத்தான் கொடுக்கப்படுகின்றன.